

පරිසරය ස්වාභාවික සම්පත් හා තිරසාර සංවර්ධනය පිළිබඳ

ආංශික අධීක්ෂණ කාරක සභාව

“දේශීය පයිනස් දැව අලෙවි ප්‍රවර්ධනය” සම්බන්ධයෙන් වන වාර්තාව

පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලද්දේ,

ගරු අජිත් මාන්නප්පෙරුම මහතා

කාරක සභාවේ සභාපති

2023 දෙසැම්බර් මස 12 වැනි අඟහරුවාදා

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய

துறைசார் மேற்பார்வைக் குழுவின்

“உள்ளூர் பைனஸ் மர விற்பனையை ஊக்குவித்தல்”

பற்றிய அறிக்கை

துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்

கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்களினால்

2023 திசம்பர் மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது

Report of the

Sectoral Oversight Committee on Environment, Natural Resources and Sustainable Development

On

the “Local Pinus Timber Promotion”

Presented to Parliament by

The Hon. Ajith Mannapperuma

Chair of the Committee

On Tuesday 12th December 2023



**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய**

**துறைசார் மேற்பார்வைக் குழு**

**“உள்ளூர் பைனஸ் மர விற்பனையை ஊக்குவித்தல்” பற்றிய அறிக்கை**

**2023 திசம்பர் மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்கள்**

கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் (தவிசாளர்)
கௌரவ சி.பி. ரத்நாயக்க
கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ ஜயந்த கெட்டகொட
கௌரவ துஷார இந்துனில் அமரசேன
கௌரவ வருன லியனகே
கௌரவ அகில எல்லாவல்
கௌரவ நாலக பண்டார கோட்டேகொட்
கௌரவ எச். நந்தசேன்
கௌரவ அலி சப்ரி ரஹீம்
கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

**குழுவின் அதிகாரங்கள்**

பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் ஒன்றான இக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள், இலங்கை பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 111 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அத்தகவல்கள் www.parliament.lk என்ற இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வெளியீடுகள்**

துறைசார் மேற்பார்வைக் குழுக்களால் வெளியிடப்படும் அறிக்கைகளை பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுப் பணியகத்தினால் (குழு அறை இலக்கம் II) அல்லது www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**குழு பதவியணி**

திருமதி குஷானி ரோஹணதீர - பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன – பதவியணித் தலைமை அதிகாரியும் பிரதிச் செயலாளர் நாயகமும்

திரு. ஹங்ச அபேரத்ன அவர்கள் - உதவிச் செயலாளர்

திரு. ஜனகாந்த சில்வா - பணிப்பாளர், சட்டவாக்க சேவைகள்

திரு. முகம்மது மப்றூக் - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)

திருமதி சமிலா ரூபசிங்க – பிரதிப் பிரதான உத்தியோகத்தர்

**வள பங்களிப்பு**

திரு. எச்.ஜீ. பாஸ்வர சேனாநாயக்க, தலைவர், அரச மரக் கூட்டுத்தாபனம்

கலாநிதி நிமல் ருவன்பதிரன, பணிப்பாளர் நாயகம், அரச மரக் கூட்டுத்தாபனம்

திரு. ஜீ.ஜீ.ரீ. கமகே, பிரதிப் பணிப்பாளர் நாயகம், அரச மரக் கூட்டுத்தாபனம்

திரு. டபிள்யூ,பி. சமந்த, பிரதிப் பொதுமுகாமையாளர் (விற்பனை)

**குறிப்பு மற்றும் விசாரணைகள்**

இந்த அறிக்கை தொடர்பான அனைத்து விசாரணைகளும் செயலாளர், சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பொதுவான விசாரணைகளுக்கு, 0112777100 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

பொருளடக்கம்

1. அறிமுகம் ........ 3
2. லங்கையின் வணிக வன செய்கை ........ 3
3. லங்கையின் பைனஸ் வன செய்கை ........ 4
4. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பைனஸ் மரச் செய்கை மற்றும் விற்பனையின் முன்னேற்றம் ........ 5
5. பைனஸ் மர விற்பனை விலை பகுப்பாய்வு ........ 7
6. வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் முழுமையாக வெட்டுவதற்கு எதிர்வரும் காலங்களில் விடுவிப்பதற்கு சாத்தியமுள்ள பைனஸ் வனச் செய்கை ........ 8
7. பைனஸ் மர விற்பனையில் எழுந்துள்ள சிக்கல்கள் ........ 8
8. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கிழித்த பைனஸ் மர விலை பகுப்பாய்வு ........ 9
9. உள்ளூர் பைனஸ் மரத்திற்கான கேள்வியை அதிகரித்துக்கொள்ளல் ........ 12
10. குழுவின் பரிந்துரைகள் ........ 15

இணைப்பு – குழுவிற்கு அழைக்கப்பட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் மரச் சங்கங்களின் பிரதிநிதிகள்

## 1. அறிமுகம்

கடந்த 3 வருடத்தினுள் 480 கோடி ரூபா பெறுமதியான பைனஸ் மரங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன், வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள காடுகளில் சுமார் 1200 ஹெக்டயார் அளவிலும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழுள்ள காடுகளில் சுமார் 1764 ஹெக்டயார் என்ற ரீதியில் தற்போது 18 வருடங்களுக்குத் தேவையான பைனஸ் மரங்கள் கைவசம் உள்ளமை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான பாராளுமன்ற துறை மேற்பார்வைக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பயன்படுத்தத்தக்க வகையிலான பைனஸ் மரங்கள் இந்நாட்டில் உள்ள பின்னணியில் பாரிய அளவிலான அந்நியச் செலாவணி ஒன்றினை செலவிட்டு பைனஸ் மரக்கட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளமையால் அது தொடர்பாக பொருத்தமான தீர்வொன்றினை எட்டும் வகையில் துறைசார் மேற்பார்வைக் குழுவானது 2023 யூலை மாதம் 18, செப்தெம்பர் மாதம் 05, 22 மற்றும் நவம்பர் மாதம் 28 ஆகிய தினங்களில் இடம்பெற்ற கூட்டங்களின் போது இது தொடர்பாக கலந்துரையாடியது. துறைசார் மேற்பார்வைக் குழுவினால் இது தொடர்பாக பணியாற்றுகின்ற பிரதான அரச நிறுவனமான அரச மரக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பைனஸ் செய்கை தொடர்பான ஆய்வொன்றினையும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பைனஸ் மரத்திற்கான செலவினம் மற்றும் உள்ளூர் பைனஸ் மர உற்பத்திக்கான செலவினம் என்பன தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் அடிப்படையில் மேற்பார்வைக் குழுவின் அவதானிப்புகள், பரிந்துரைகள் மற்றும் கருத்துரைகள் என்பவற்றினை பாராளுமன்றத்திடம் பெற்றுக்கொடுத்து அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த துறைகளின் கவனத்தை இதன் பக்கம் ஈர்க்க வைப்பதற்கும் துறைசார் மேற்பார்வைக் குழுவினால் இந்த அறிக்கைத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2. இலங்கையின் வணிக வன செய்கை

இலங்கையில் மரத்தினை வழங்கும் பிரதான மூலங்களாக வன செய்கை மரங்கள், வீட்டுத் தோட்டச் செய்கை மரங்கள், இறக்குமதி செய்யப்பட்ட மரங்கள், தேங்காய், இரப்பர் மற்றும் தனியார் தோட்ட நிறுவனங்களின் மரங்கள் மற்றும் ஆபத்தான மரங்கள் மற்றும் நன்கொடையாக வழங்கப்பட்ட மரங்கள் மற்றும் வன குற்றத் தடுப்பு பிரிவின் மரங்கள் என்பன அடங்கும். அரச மரக் கூட்டுத்தாபனம் இலங்கையில் மரங்களை வழங்கும் பிரதான அரச நிறுவனமாகும், மேலும் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வருடாந்தம் சுமார் 1000-1200 ஹெக்டயார் காட்டுத் தோட்ட மரங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்படுகிறது.

தற்போது, வன பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஏறத்தாழ 96,000 ஹெக்டயார் வனத் தோட்டங்கள் உள்ள போதிலும் அவை அனைத்தையும் மர உற்பத்திக்கு பயன்படுத்த முடியாது. வன செய்கைகளில் 2019 ஆம் ஆண்டில் அரச மரக் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்த மரத்தின் அளவு ஏறத்தாழ 100,000 கன மீட்டர் ஆகும், இது 1995 ஆம் ஆண்டிலே தயாரிக்கப்பட்ட வன முகாமைத்துவத் திட்டத்தின் மூலம் கணிக்கப்பட்ட தொகையில் சுமார் 24% ஆகும். அந்தக் கண்ணோட்டத்தில் வன செய்கையில் பாரிய உற்பத்தி திறன் இழக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது. இயற்கைமயமாக்கல், பாதுகாப்பு, அபிவிருத்திக் கருத்திட்டங்கள் என்பவற்றிற்கான ஒதுக்கீடுகள் போன்றவற்றால், உற்பத்திக்கு பயன்படுத்தக் கூடிய காடுகளின் அளவு குறைந்துள்ளதுடன், உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடிய வன செய்கை காடுகளின் அளவு பின்வருமாறு.

| **இனம்** | **அளவு (ஹெக்டயார்)** |
|---|---:|
| 1. தேக்கு | 23,266 |
| 2. இயூகலிப்டஸ் | 20,716 |
| 3. பைனஸ் | 16,365 |
| 4. மஹோகனி | 4,997 |
| 5. அகேசியா | 3856 |
| 6. காயா | 291 |
| 7. பிற | 5417 |
| **மொத்தம்** | **74,912** |

**3. லங்கையின் பைனஸ் வன செய்கை**

இலங்கையில் 1870 தசாப்தத்தில் வன வளர்ப்பு தொடங்கியது. அன்று முதல் இது வரையில் குறிப்பிடத்தக்க அளவு நிலப் பகுதியில் வன வளர்ப்பு நிறுவப்பட்டுள்ளது. தேக்கு, இயூகலிப்டஸ், பைனஸ் மற்றும் மஹோகனி ஆகியவை இந்த வன வளர்ப்பிற்கு முக்கியமாக பயன்படுத்தப்பட்டன. ஊசியிலையுள்ள தாவரமாகக் கருதப்படும் பைனஸ் மரங்களின் செய்கையானது இலங்கையில் 1960-1990 இற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்றது. இவ்வாறு சேனை விவசாயத்தால் இயற்கை காடுகள் அழிக்கப்பட்டு சீரழிந்த நிலங்களில் காடுகளை உருவாக்கும் நோக்கில் பைனஸ் வனத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில், 1967 ஆம் ஆண்டிலே பாரிய அளவிலான பைனஸ் செய்கை தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரம்பத்தில், இந்த பைனஸ் வன செய்கையானது மலையகப் பகுதியில் உள்ள சீரழிந்த (Degradation) வறண்ட மற்றும் வீழ்ச்சி நிலங்களுக்கும், தாழ்நில ஈரமான மற்றும் இடைநிலைப் பகுதியில் உள்ள அரிப்பு (Baron/bear) நிலங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டது. பைனஸ் தாவரமானது பொதுவாக இலங்கையில் மட்டத்தில் 30-40 மீட்டர் உயரமும் 40-50 சென்டிமீட்டர் விட்டமும் வரை வளரும். பல பைனஸ் இனங்கள் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் பெரிய அளவிலான பயன்பாட்டிற்காக இரண்டு இனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவையாவன *Pinus caribaea var. hondurensis* மற்றும் *Pinus patula* என்பனவாகும்.

செங்குத்தான சரிவுகளைக் கொண்ட பகுதிகளில் பைனஸ் தோட்டங்கள் பெரும்பாலும் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ளன. தற்போது, 30 டிகிரிக்கு மேல் சரிவு உள்ள நிலப் பகுதிகளிலும், 5000 அடிக்கு மேல் உயரம் உள்ள நிலப் பகுதிகளிலும், மண் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு பைனஸ் மரங்களை வெட்டுவதை வன பாதுகாப்புத் திணைக்களமானது கட்டுப்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஏறத்தாழ 16,000 ஹெக்டயார் வன செய்கை காணப்படுகின்றது. அதில் பெருமளவு அதாவது 94% இற்கும் அதிகமான நிலப் பரப்பில் *Pinus caribaea* நடப்பட்டுள்ளன. மேலும் ஏறத்தாழ 700 ஹெக்டயார் நிலப் பரப்பில் *Pinus patula* பைனஸ் வகைகள் வளர்க்கப்பட்டுள்ளன. இந்த பைனஸ் வன செய்கை இரத்தினபுரி, கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை, காலி, களுத்துறை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. இந்த பைனஸ் வன செய்கையில் 60% உரிமை வன பாதுகாப்புத் திணைக்களத்திடம் காணப்படுவதுடன், 38% காணி சீர்திருத்தத் திணைக்களத்திடம் உள்ளது. பைனஸ் செய்கை அனைத்தும் காணியின் உரிமையினைப் பாராது வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பராமரித்து பாதுகாத்து வரப்படுகின்றது.

இந்த பைனஸ் வன வளர்ப்பானது மூன்று வேலை சுழற்சிகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. அதாவது, உணர்திறன் பகுதிகளின் பாதுகாப்பு வேலை சுழற்சி, உணர்திறன் இல்லாத பகுதிகளின் மர உற்பத்தி வேலை சுழற்சி மற்றும் ரெசின் உற்பத்தி வேலை சுழற்சி என்பனவாகும்.

**4. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பைனஸ் மரச் செய்கை மற்றும் விற்பனையின் முன்னேற்றம்**

அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் கடந்த 10 ஆண்டு காலப் பகுதியினுள் உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ள பைனஸ் மரத்தின் அளவு பின்வருமாறு.

| ஆண்டு | உற்பத்தி செய்த மரத்தின் அளவு (க.மீ.) | | | | | விற்பனை செய்த மரத்தின் அளவு (க.மீ.) |
|---|---|---|---|---|---|---|
| | அரச வனச் செய்கை | மர அன்பளிப்பு | வன குற்ற மரங்கள் | தனியார் காணி மரங்கள் | மொத்தம் | |
| 2022 | 33,537 | 2,090 | 39 | 85 | 35,751 | 34,994 |
| 2021 | 41,523 | 3,117 | 33 | - | 44,673 | 43,079 |
| 2020 | 23,838 | 4,040 | 91 | 11 | 27,980 | 26,949 |
| 2019 | 30,570 | 2,112 | 16 | - | 32,698 | 32,426 |
| 2018 | 38,262 | 6,609 | 14 | 400 | 45,285 | 45,093 |
| 2017 | 41,844 | 5,765 | 61 | 1,162 | 48,832 | 51,010 |
| 2016 | 49,826 | 4,948 | 30 | 293 | 55,097 | 54,312 |
| 2015 | 39,420 | 6,177 | 14 | 55 | 45,666 | 41,171 |
| 2014 | | | | | - | 31,150 |
| 2013 | 17,778 | 4,350 | 141 | 643 | 22,912 | 21,559 |

அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலே உற்பத்தி மற்றும் விற்பனை செய்துள்ள அதிகப்படியான மரத்தின் அளவு முறையே க.மி.49,826 மற்றும் க.மீ. 54,312 ஆகவும் ஆகக் குறைந்த மரத்தின் அளவாக 2013 ஆம் ஆண்டிலே உற்பத்தி செய்யப்பட் க.மீ. 17,778 மற்றும் க.மீ.21,559 விற்பனையும் பதிவாகியுள்ளது.

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஆண்டுக்கு 500 ஹெக்டயார் வீதம் 08 ஆண்டுகளில் 4,000 ஹெக்டார் பைனஸ் வனத் தோட்டங்களை வெட்டி முடிக்க் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த போதிலும் இந்த வெட்டும் பணிகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2028 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட இருந்தது. மேலும், பைனஸ் மரங்களை வெட்டும் நடவடிக்கைகள் முடிந்த பின்னா் பொருளாதார மற்றும் சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தாவர வகைகளை அங்கு மீள் பயிரிடுவதற்கும் முன்மொழியப்பட்டிருந்தது.

எனினும் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, அதிகரித்த உற்பத்தி செலவுகள் மற்றும் மர விற்பனை தொடர்பான கட்டுமானத் துறையின் பின்னடைவு என்பன காரணமாக, பைனஸ் மரத்திற்கான கேள்வி குறைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலே அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பைனஸ் மர உற்பத்தி மற்றும் விற்பனை என்பன மாதாந்தம் பின்வருமாறு.

| மாதம் | உற்பத்தி செய்த மரத்தின் அளவு (க.மீ.) | விற்பனை செய்த மரத்தின் அளவு (க.மீ.) |
|---|---|---|
| சனவரி | 4,679 | 4,373 |
| பெப்ரவரி | 4,881 | 4,812 |
| மார்ச் | 6,013 | 6,267 |
| ஏப்ரல் | 3,392 | 3,365 |
| மே | 2,009 | 2,021 |
| யூன் | 2,658 | 2,331 |
| யூலை | 1,127 | 1,036 |
| ஆகஸ்ட் | 2,970 | 2,945 |
| செப்தெம்பர் | 2,238 | 2,225 |
| ஒக்தோபர் | 1,934 | 1,729 |
| நவம்பர் | 2,047 | 1,945 |
| திசெம்பர் | 1,804 | 1,945 |
| **மொத்தம்** | 35,752 | 34,994 |

மேலும் 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் பைனஸ் மர உற்பத்தி க.மீ.18,317 ஆகவும் விற்பனை 18,606 ஆகவும் காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பைனஸ் மர உற்பத்தி மற்றும் விற்பனை க.மீ.25,000 பெறுமதியை கொண்டிருக்குமென எதிர்வுகூறலாம். 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையில் பைனஸ் மர விற்பனை மற்றும் உற்பத்தி பின்வருமாறு

| மாதம் | உற்பத்தி செய்த மரத்தின் அளவு (க.மீ.) | விற்பனை செய்த மரத்தின் அளவு (க.மீ.) |
|---|---|---|
| சனவரி | 1,187 | 1,458 |
| பெப்ரவரி | 2,031 | 1,973 |
| மார்ச் | 1,572 | 2,171 |
| ஏப்ரல் | 854 | 1,075 |
| மே | 1,725 | 1,655 |
| யூன் | 3,293 | 3,240 |
| யூலை | 3,514 | 3,351 |
| ஆகஸ்ட் | 4,141 | 3,683 |
| **மொத்தம்** | **18,317** | **18,606** |

**5. பைனஸ் மர விற்பனை விலை பகுப்பாய்வு**

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டிலே முழுமையாக வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்ட வன செய்கை அடிப்படையிலான பைனஸ் மரம் க.மீ.01 உற்பத்தி செய்வதற்காக செலவாகும் செலவினம் மற்றும் பைனஸ் மரம் க.மீ.01 விற்பனை செய்யக் கூடிய விலைகள் பினவருமாறு கணிக்கிடப்பட்டுள்ளது.

**பைனஸ் ஏற்றுமதி செய்யும் போது ஏற்படும் செலவு – வேலைத்தளத்தில் இருந்து கொழும்பு துறைமுகம் வரை**

| விபரம் | குறிப்பு | கொள்கலன் ஒன்றிற்கான தொகை | ரூ./க.மீ. ஒன்றிற்கு | ரூ./க.மீ. ஒன்றிற்கு |
|---|---|---|---|---|
| **மூலப் பொருள் செலவு** | | | | |
| அரச கட்டணம் | 1 | | 11,125.96 | **11,125.96** |
| **ஆரம்பச் செலவு** | | | | |
| கணக்கீடு செலவுகள் | 2 | | 20.00 | |
| வீதி நிர்மாணச் செலவுகள் | 2 | | 421.66 | **441.66** |
| **உற்பத்திச் செலவு** | | | | |
| வெட்டி வீழ்த்துவதற்கான செலவு | 2 | | 1,073.53 | |
| துண்டாக்கல் செலவு | 2 | | 413.33 | |
| சுமந்து செல்லல் மற்றும் ரூட் கட்டணங்கள் | 2 | | 2,181.92 | |
| ஏற்றும் செலவு | 2 | | 1,837.89 | |
| இறக்கும் செலவு | 2 | | 769.16 | **6,275.83** |
| **வேலைத்தளத்தில் இருந்து கொழும்பு துறைமுகம் வரை** போக்குவரத்துச் செலவு | 2 | | 8,452.63 | **8,452.63** |
| **போக்குவரத்துச் செலவு உட்பட மொத்த உற்பத்திச் செலவு** | | | | **26,296.08** |
| நிர்வாகச் செலவு - 10% | | | | 2,629.61 |
| | | | | **28,925.69** |
| இலாபம் - 25% | | | | 7,231.42 |
| **அ.ம.கூ. – கொழும்பு விற்பனை விலை** | | | | **36,157.11** |

அதன்படி, வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின பைனஸ் வனச் செய்கையில் இருந்து. 1 க.மீ. கொண்டுசெல்ல ரூ.6,275.83 தொகை செலுத்த வேண்டும் மற்றும் கொழும்பு வரை கொண்டுசெல்ல 1 க.மீ. இற்கு ரூ.8,452.63 செலவாகின்றது. வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கான கட்டணமாக 1 க.மீ. இற்கு ரூ.11,125.96 தொகையும் மரங்களைக் குறிக்கவும், நுழைவுப் பாதையை அமைக்கவும் ரூ.441.66 தொகையும் செலவாகின்றது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக 10% மற்றும் இலாப தொகையாக 25%. பேணி வந்ததன் பின்னர் பைனஸ் 1 க.மீ. கொழும்புச் சந்தையில் ரூ.36,157.11 தொகைக்கு விற்பனை செய்ய முடியும்.

## 6. வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் முழுமையாக வெட்டுவதற்கு எதிர்வரும் காலங்களில் விடுவிப்பதற்கு சாத்தியமுள்ள பைனஸ் வனச் செய்கை

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பராமரித்துப் பேணிவருகின்ற பைனஸ் வன செய்கை தோட்டங்களின் அளவு பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட மர அறுவடையின் படி கணிக்கப்பட்ட மரத்தின் அளவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | **ஹெக்டயார் அளவு** |
|---|---|---|
| 1 | வெட்டுவதற்கு ஏற்ற நிலையிலுள்ள முதிர்ந்த பைனஸ் வனச் செய்கையின் அளவு | 1,154.55 |
| 2 | இயற்கையாக முதிர்ந்த பைனஸ் வனச் செய்கையின் அளவு | 738.95 |
| 3 | சுற்றாடல் உணர்திறன் மண்டலங்களுக்குள் அமைந்துள்ள முதிர்ந்த பைனஸ் மரச் செய்கையின் அளவு | 989.01 |
| 4 | ரெசின் பிரித்தெடுக்கும் முதிர்ந்த பைனஸ் மரச் செய்கையின் அளவு | 738.72 |
| 5 | அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் வெட்டுவதற்காக 2021, 2022 ஆண்டுகளில் விடுவித்துள்ள மரச் செய்கையின் அளவு | 557.96 |
| | **மொத்தம்** | **4,179.19** |

அதன்படி, அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக வெட்டும் அடிப்படையில் மேற்படி அட்டவணையின் இலக்கம் 1 மற்றும் 5 இல் குறிப்பிட்டுள்ள 1,712.51 ஹெக்டயாரில் க.மீ. 452,973 அளவான பைனஸ் மர அறுவடை ஒன்றினை எதிர்வரும் ஆண்டுகளில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இலக்கம் 4 இன் கீழ் 738.72 ஹெக்டயாரில் க.மீ. 195,398 அளவான பைனஸ் மர அறுவடையை 10 ஆண்டுகளின பின்னர் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மேலும் இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்வபாவமயமாக்கப்பட்டுள்ள முதிர்வடைந்த பைனஸ் வன செய்கையின் அளவினை நிச்சயித்ததன் பின்னர் வெட்டுவதற்கு உகந்ததாக இருந்தால், வெட்டி அறுவடை செய்வதற்கு இலக்கம் 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் உணர்திறன் வலயங்களில் அமைந்துள்ள முதிர்வடைந்த பைனஸ் வன செய்கையில் ஒரு பகுதியை பல்வேறு சுற்றாடல் நிலைகளின் கீழ் அறிவியல் ரீதியான மரம் வெட்டுதலின் கீழ் அறுவடை செய்யும் பணிகள் இடம்பெறும்.

## 7. பைனஸ் மர விற்பனையில் எழுந்துள்ள சிக்கல்கள்

தற்போது, உள்ளூர் பைனஸ் மரத்திற்கான கேள்வியானது மூன்று முக்கிய காரணிகளால் குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டிலே நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் அதிக பணவீக்க நிலை என்பன காரணமாக அதிகரித்த தொழிலாளர் வாடகை அதிகரிப்பு மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு மற்றும் பழுதுபார்ப்பு வேலைகள் என்பவற்றிற்கு அதிக செலவு ஏற்பட்டுள்ளமை என்பன மரம் வெட்டுவதில் நேரடி எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவ்வாறு மரம் வெட்டுவதற்கான அதிக செலவு காரணமாக மரத்தின் விற்பனை விலை வேகமாக அதிகரித்தது.

1. பைனஸ் மரத்திற்கு அதிக கேள்வி நிலவும் கட்டுமானத் கைத்தொழிலின் திடீர் சரிவு.

கட்டிட நிர்மாணம் மற்றும் ஏனைய நிர்மாணங்களின் முன்னேற்றம் 2022 ஆம் ஆண்டிலே 21% ஆக 2022 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் நிர்மாணக் கைத்தொழிலின் விருத்தியானது 5% அமையமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

**2. வெளிநாட்டு இறக்குமதியின் கீழ் இந்நாட்டு சந்தைக்கு வந்துள்ள பைனஸ் மரங்கள்**

2018 முதல் 2022 வரையான ஆண்டுகளில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பைனஸ் மரங்கள் பற்றிய விபரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | இறக்குமதி செய்த பைனஸ் கிழித்த மரப் பலகைகளின் அளவு (கன மீட்டரில்) | செலவினம், காப்புறுதி மற்றும் பொருள் இறக்குமதிப் பெறுமதி (CIF) (ரூ.) | பைனஸ் கிழித்த மரப் பலகை கன மீட்டருக்கு CIF பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|
| 2018 | 20,782.08 | 681,785,612.00 | 32,806.41 |
| 2019 | 14,715.12 | 470,026,647.00 | 31,941.74 |
| 2020 | 20,601.98 | 640,948,070.00 | 31,110.99 |
| 2021 | 26,441.22 | 1,346,224,313.00 | 50,913.85 |
| 2022 | 16,359.02 | 1530,639,063.00 | 93,565.44 |
| **மொத்தம்** | **98,899.42** | **4,669,623,705.00** | **240,338.43** |

**8. உள்;ர் மற்றும் வெளிநாட்டு கிழித்த பைனஸ் மர விலை பகுப்பாய்வு**
**உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பைனஸ் கிழித்த பலகை க.மீ. 1 இற்கு செலவாகும் தொகை பின்வருமாறு.**

**கிழித்த மரத்திற்காக செலவினைக் கணிப்பிடல் - அ.ம.கூ. பைனஸ்**

| விபரம் | ரூ./கன மீட்டருக்கு |
|---|---|
| மரப் பெறுமதி - (கிழித்த மரம் க.மீ. 1 = மரக் குற்றி க.மீ. 2) | 72,314.22 |
| மரம் கிழிப்பதற்கான செலவு | 15,000.00 |
| பதப்படுத்துவதற்கான செலவு | 15,500.00 |
| போரோன் சிகிச்சைக்கான செலவு | 12,500.00 |
| **கிழித்த மரத்திற்கான மொத்தச் செலவு** | **115,314.22** |

அதன்படி உள்ளூரில் பைனஸ் கிழித்த மரம் க.மீ. 1 உற்பத்தி செய்வதற்காக ரூ. 115,314.22 பெறுமதியான தொகை செலவாகின்றது. எனினும் உள்ளூரில் உற்பத்தி செய்கின்ற கிழித்த மரம் 1 க.மீ. 1 ரூ.120,550.72 தொகைக்கு இந்நாட்டிற்குக் கொண்டுவர முடியும்.

**துறைமுகம் வரை பைனஸ் இறக்குமதி செய்வதற்குச் செலவாகும் தொகை**

| விபரம் | கொள்கலன் ஒன்றிற்கு (கன மீட்டர் 20) | கன மீட்டர் ஒன்றிற்கு ரூ. | கன மீட்டர் ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|---|
| கிழித்த பைனஸ் மரத்திற்கான செலவினம், காப்புறுதி மற்றும் பொருள் இறக்குமதிப் பெறுமதி **(CIF)**(ரூ.) | | | **93,565.44** |
| பெறுமதி சேர் வரி வீதம் (VAT) - 15 | | | 14,034.82 |
| | | | **107,600.26** |
| துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி வீதம் (PAL) - 10% | | | 9,356.54 |
| | | | **116,956.80** |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி வீதம் (SSCL) - 2.5% | | | 2,923.92 |
| | | | **119,880.72** |
| சுங்க ஆவணக் கட்டணம் | 1,500.00 | 75.00 | |
| முகவர் நிறுவனக் கட்டணம் | 3,000.00 | 150.00 | |
| காகிதாதிகள் கட்டணம் | 3,500.00 | 175.00 | |
| கொள்கலனுக்கான அறவீடு | 2,900.00 | 145.00 | |
| சீரற்ற கட்டுப்பாட்டு பரீட்சித்துப் பார்த்தல்/ஊடுகதிர்/ விசாரணை செய்தல் | 2,500.00 | 125.00 | 670.00 |
| துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கிழித்த மர விலை | | | **120,550.72** |

இறக்குமதி செய்யப்பட்ட கிழித்த பைனஸ் மரம் உயர் தொழில்நுட்ப இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், இது ஒப்பீட்டளவில் உயர் தரம் மற்றும் எடை குறைவாக உள்ளதுடன், இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கிழித்த பைனஸ் மரம் 1 க.மீ. இற்கு செலவாகும் தொகையுடன் ஒப்பிடும் போது, ஒரு சிறிய வித்தியாசம் மட்டுமே காணப்படுகிறது. இந்த காரணங்களால்,

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பைனஸ் மரக்கட்டைகளுக்கு ஒப்பீட்டளவில் அதிக கேள்வி நிலவுவதுடன் விசேட பயன்பாடுகளும் உள்ளன.

உள்ளூர் பைனஸ் மரத்தினை இந்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுப் பைனஸ் மரத்துடன் போட்டித் தன்மைமிக்க விலையில் விற்பனை செய்வதற்காக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பைனஸ் மரம் க.மீ. 1 ரூ.28,800.00 தொகை அதாவது ஐ.அ.டொ 90 அளவில் பேணிவர வேண்டியுள்ளது.

**CIF பெறுமதியின் அடிப்படையில் கொழும்பு களஞ்சியத்தில் விலை கணிப்பீடு - இந்தியாவிற்கு**

| விபரம் | கன மீட்டர் ஒன்றிற்கு ரூ. | கன மீட்டர் ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|
| **CIF பெறுமதி (இந்தியாவிற்கு) கன மீட்டருக்கு அமெரிக்க டொலர் 130 வீதம்** | | **42,538.60** |
| ஏற்றுமதியாளரின் இலாபப் பங்கு - 5% | 2,126.93 | |
| பொருள் போக்குவரத்து – கொழும்பு முதல் தூத்துக்குடி வரை கொள்கலன் ஒன்றிற்கு அமெரிக்க டொலர் 185 | 2,161.99 | |
| முன்னனுப்புதல் மற்றும் கையாளுதல் | 178.57 | |
| முகவர் நிறுவனக் கட்டணம் | 178.57 | |
| ஆவணக் கட்டணம் | 71.43 | |
| சுங்கச் சரிபார்ப்பு | 89.29 | |
| துறைமுகம் வரை போக்குவரத்து | 1,785.71 | |
| ஏற்றுதல் கட்டணம் | 1,250.00 | |
| புகைக் கட்டணம் | 1,428.57 | |
| Phytho சான்றிதழ் | 196.43 | |
| வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 192.86 | 9,660.35 |
| கன மீட்டர் ஒன்றிற்கு அ.ம.கூ விலை **(15% VAT உட்பட)** | | **32,878.25**<br>$ 102.74 |
| கன மீட்டர் ஒன்றிற்கு அ.ம.கூ விலை **(VAT இன்றி)** | | **28,589.78**<br>$ 89.34 |

**9. உள்;ர் பைனஸ் மரத்திற்கான கேள்வியை அதிகரித்துக்கொள்ளல்**

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பைனஸ் மரத்திற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தேவையை அதிகரிக்க பின்வரும் தீர்வுகளை முன்வைக்கலாம்.

- பைனஸ் மரத்தினை வன பாதுகாப்புத் திணைக்களத்தின் வன செய்கைகளில் இருந்து வெட்டுவதற்காக செலுத்தப்படுகின்ற அரச கட்டணத்தை ரூ.11,125.96 பெறுமதியில் இருந்து ரூ.8,500.00 வரை குறைத்தல்.

- அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் மரங்களை வனவியல் திணைக்களத்தின் காடுகளில் இருந்து வெட்டி விற்பனை செய்யும் பைனஸ் மரத்திற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தால் இடப்பட்டுள்ள 25% இலாபத் தொகையை 10% வரை குறைத்தல். அரச மரக் கூட்டுத்தாபணத்தினால் மங்சல விற்பனை விலையில் 20% ஆகக் குறைந்த இலாபமொன்று வைத்திருத்தல் வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. போட்டித் தன்மைமிக்க விலையொன்றினை பேணி வருவதற்காக 10% இலாபப் பங்கொன்று பேணிவரல் பொருத்தமானதென முன்மொழியப்பட்டுள்ளது.

அவ்வாறு அரச கட்டணத் தொகை மற்றும் இலாபம் என்பவற்றினைக் குறைத்து பைனஸ் மரக்கட்டை க.மீ. 1 ரூ. 28,640.85 பெறுமதியான தொகைக்கு உள்ளூர் சந்தைக்கு வழங்கக் கூடியதாக உள்ளதுடன், வெளிநாட்டுச் சந்தைக்கு ரூ.34,637.96 பெறுமதியான தொகைக்கு வழங்க முடியும்.

| விபரம் | கன மீட்டர் ஒன்றிற்கு ரூ. | கன மீட்டர் ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|
| **மூலப்பொருள் செலவு** | | |
| **அரச கட்டணம்** | 8,500.00 | **8,500.00** |
| **கணக்கீட்டுச் செலவு** | 20.00 | |
| **பாதை நிர்மாணச் செலவு** | 421.66 | **441.66** |
| **உற்பத்திச் செலவு** | | |
| வெட்டி வீழ்த்துதல் செலவு | 1,073.53 | |
| துண்டுபண்ணல் செலவு | 413.33 | |
| சுமந்து செல்லல் மற்றும் ரூட் கட்டணங்கள் | 2,181.92 | |
| ஏற்றுதல் செலவு | 1,837.89 | |
| இறக்குதல் செலவு | 769.16 | **6,275.83** |
| **போக்குவரத்துச் செலவு உட்பட மொத்த உற்பத்திச் செலவு** | 8,452.63 | **8,452.63** |
| நிருவாகச் செலவு - 10% | | **23,670.12** |
| | | 2,367.01 |
| இலாபம் - 10% | | **26,037.13** |
| **அ.ம.கூ. – கொழும்பு விற்பனை விலை** | | 2,603.71 |
| போக்குவரத்துச் செலவு உட்பட மொத்த உற்பத்திச் செலவு | | **28,640.85** |

| விபரம் | 20GP கொள்கலன் ஒன்றிற்கு | ரூ./கன மீட்டர் ஒன்றிற்கு | ரூ./கன மீட்டர் ஒன்றிற்கு |
|---|---|---|---|

| | செலவாகும் தொகை | | |
|---|---|---|---|
| **அ.ம.கூ. – கொழும்பு விற்பனை விலை** | | | **28,640.85** |
| **சுங்கத்திற்கு அனுப்புவதற்கான செலவு** | | | |
| போக்குவரத்துச் செலவு - கொழும்பிலிருந்து துறைமுகத்திற்கு | 30,000.00 | 1,534.53 | |
| ஏற்றுதல் செலவு | | 1,301.00 | |
| முன்னனுப்புதல் மற்றும் கையாளுதல் கட்டணம் | 25,000.00 | 1,253.13 | |
| முகவர் நிறுவனக் கட்டணம் | 3,000.00 | 150.38 | |
| ஆவணப்படுத்தல் கட்டணம் | 2,000.00 | 102.30 | |
| சுங்க சரிபார்ப்புப் பிரிவு | 2,500.00 | 127.88 | **4,469.21** |
| **ஏனைய தொடர்புடையக் கட்டணம்** | | | |
| Phytho சான்றிதழ் | 5,500.00 | 281.33 | |
| சுரக்ஷா சான்றிதழ் | 500.00 | 25.58 | |
| வனப் பாதுகாப்பு அனுமதி | 5,400.00 | 192.86 | |
| பிற மேலதிக HS குறியீட்டிற்காக | 100.00 | 5.12 | |
| புகை ஏற்றலுக்காக | 20,000.00 | 1,023.02 | **1,527.90** |
| **பொருள் போக்குவரத்திற்கான மொத்தச் செலவினம்** | | | **34,637.96** |

**வேலைத்தளத்திலிருந்து கொழும்பு களஞ்சியத்திற்கு – பெருந்தோட்டச் செலவினம் அடங்கலாக**

| விபரம் | ரூ. | ரூ./கன மீட்டருக்கு | ரூ./கன மீட்டருக்கு |
|---|---|---|---|
| ஒரு ஹெக்டயாருக்கு பெருந்தோட்டச் **செலவு** | 1,000,000.00 | | |
| ஒரு கன மீட்டருக்கு பெருந்தோட்டச் **செலவு** | | 3,333.33 | |
| அறுவடை செலவு | | 6,300.00 | 9,633.33 |
| போக்குவரத்துக் கட்டணம் | | | 8,400.00 |
| இலாப வீதம் மற்றும் பொது பணி - 20% | | | 3,606.67 |
| **கொழும்பிற்கு ஒரு கன மீட்டரை கொண்டு வருவதற்குச் செலவாகும் தொகை** | | | **21,640.00** |

கவனிக்க - இந்த விலை மதிப்பீட்டின் போது வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுட்டிக் காட்டிய வன செய்கைக்குச் செலவாகின்ற அடிப்படை செலவினத்தை கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பின்வருவனவற்றை அடையலாம்.

1. பைனஸ் மரத்துடன் தொடர்புடைய உள்ளூர் கைத்தொழிலாளர்களுக்கு மானிய விலையில் பைனஸ் மரத்தை விற்பதன் செய்வதன் மூலம், அவர்கள் தங்கள் தொழில்களை மேம்படுத்திக் கொள்வதற்கு ஆதரவளித்து, உள்ளூர் சந்தை விரிவாக்கத்தின் ஊடாக குறிப்பிடத்தக்க பைனஸ் மரத்தினை வழங்க முடிகின்றமை. பைனஸ் மரத் தொழில் தொடர்பான தொழில்நுட்பச் சூழலை விருத்தி செய்தல்.
2. உள்ளூர் பைனஸ் மரத்திற்கு போட்டித் தன்மைமிக்க விலையொன்று கிடைக்கப் பெறல் காரணமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற பைனஸ் மரத்திற்கான கேள்வியை சுமார் 50% ஆகக் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் இதன் மூலம் வருடமொன்றிற்கு 765 மில்லியன் ரூபா அதாவது ஐ.அ.டொ. 2.4 அளவிலான தொகையினை மீதப்படுத்தக் கூடியதாக உள்ளது.
3. போட்டித் தன்மைமிக்க விலையின் கீழ் பைனஸ் மரத்தினை விற்பனை செய்யக் கூடியதாக உள்ளமையால் மேலதிக பைனஸ் மரங்களுக்கு வெளிநாட்டுசந்தை வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளல்
4. பைனஸ் மரக் கைத்தொழிலுடன் தொடர்புடைய ஏனைய துணைச் வேவைகள் அதாவது போக்குவரத்து, தொழிலாளர் சேவைகள் என்பவற்றிற்கான வாய்ப்புகள் உருவாதல்.

**10. குழுவின் பரிந்துரைகள்**

1. தற்போது வன பாதுகாப்புத் திணைக்களத்திடம் 1200 ஹெக்டயாரும் காணியும், காணி சீர்திருத்தத் திணைக்களத்திடம் 1764 ஹெக்டயார் காணியும் வெட்டுவதற்கு தகுந்த நிலையில் 2964 ஹெக்டயார் காணியில் பைனஸ் வணிக வன செய்கையொன்று இந்நாட்டிலே காணப்படுகின்றது. பல்வேறு சுற்றாடல் நோக்கங்கள் மற்றும் ரெசின் பிரித்தெடுத்தல் உட்பட 16,365 ஹெக்டயார் வணிக பைனஸ் வன வளர்ப்பு இலங்கையிடம் உள்ளது. அந்நோக்கங்களை நிறைவேற்றி இந்த 13,401 ஹெக்டயார் வன செய்கைகளில் சில விதிகளின் கீழ் மரங்களை அகற்றும் அதே முறையைப் பின்பற்றுவதன் மூலம் மரத் தொழிலாளியை நிலையாகப் பாதுகாக்கும் வகையில் விடுவித்துக்கொள்ள முடியும். தற்போது வெட்டுவதற்கு பொருத்தமான 2964 ஹெக்டயார் நிலப் பரப்பில் காலம் கடந்துள்ள மரத்தினை 10 வருடங்களுக்குள் விடுவிக்கும் நோக்கில் இந்த வணிக வன செய்கை 300 ஹெக்டயார் மரக்கட்டைகள் (கன மீட்டர் 90,000) சந்தைக்கு விடுவிப்பதன் மூலம் வருடாந்த பைனஸ் இறக்குமதி மூலம் நாட்டிற்கு இல்லாது போகின்ற 50 மில்லியன் அமெரிக்க டொலரை மீதப்படுத்தக் கூடியதாக உள்ளதுடன், மீதிப் பெறுமதியை (க.மீ. 50,000) ஏற்றுமதிக்காக வழங்குவதன் மூலம் வருடம் ஒன்றிற்கு 14 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடியும்.

2. இந்த நோக்கத்திற்காக, தற்போது வேலைத்தலத்தில் உள்ள மரமொன்றின் அரசாங்க கட்டணமான வன பாதுகாப்புத் திணைக்களம் அறவிடுகின்ற பெறுமதி ரூ.11,125/= ஆகும், இது ரூ.8500/= குறைக்கப்பட வேண்டும். மேலும், மரக் கழகத்தின் இலாபத்தை விற்பனை விலையில் 25% ,லிருந்து 10% ஆக அரசு குறைக்க வேண்டும். மேலும், அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு நிர்வாகச் செலவாகப் பெறப்படும் தொகையை விற்பனை விலையில் 10% என வைத்துக் கொள்ளலாம். ஆண்டுதோறும், இந்த விலைகள் டொலர் மதிப்பு மற்றும் அரச கட்டண சூத்திரம் சரிசெய்தலுக்கு உட்பட வேண்டும்.

3. வணிக ரீதியான பைனஸ் வன செய்கை அழிக்கப்பட்டவுடன், மீண்டும் வன செய்கை நிறுவ திறைசேரியிலிருந்து நிதியைப் பெறுவதில் உள்ள சிரமத்தால் இந்த செயல்முறை கடுமையாக தடைபட்டுள்ளது. இங்கு, 1 ஹெக்டேரில் உள்ள பைனஸ் மரங்களை அகற்றுவதில், திறைசேரிக்கு ரூ.2,550,000/= கிடைக்கிறது. காடுகளை வளர்க்க ஹெக்டயாருக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டும். மேற்கூறிய தடையை நீக்க, மீண்டும் நடவு செய்வதற்கான நிதியில் பணத்தை வைப்புச் செய்யும் முறையை உருவாக்கவும், இந்த நிதியை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கீழ் பராமரிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.

4. அவ்வாறே மரக் கட்டையாக பைனஸ் மர இறக்குமதியை முழுமையாக நிறுத்தி வழங்கலை வருடாந்தம் 90,000m$^3$ ஆக தொடர்ச்சியாக வைத்துக்கொள்வதற்கான வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொறிமுறையொன்றை முன்வைத்து மரம் சார்ந்த கைத்தொழிலாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. பைனஸ் மரங்களின் முறையான ஏற்றுமதி பெறுமதி சேர்க்கும் முறையை ஊக்குவித்து அதன் மூலம் வெளிநாட்டு ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க முடியும்.

6. வேறு எந்த செய்கையும் மேற்கொள்ள முடியாத நிலத்தில் பைனஸ் பயிரிடப்பட வேண்டும் என்றாலும், பல நிலங்களில் பைனஸ் பரிசீலிக்கப்படாமல் பயிரிடப்பட்டதால் அது சர்ச்சைக்குரியதாகிவிட்டது. பைனஸ் செய்கைக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, சம்பந்தப்பட்ட நிலங்களில் மரம் பெறுவதற்கு ஏற்ற பைனஸ் வகைகளை பயிரிட பரிந்துரைக்க வேண்டும். தற்போது பயிரிடப்படும் பைனஸ் இனமானது Pinus caribbea ஆகும், இது தற்போது காகித கூழ் உற்பத்திக்கு உள்நாட்டில் பயன்படுத்தப்படவில்லை என்பதால் மரம் உற்பத்தி மற்றும் காகித கூழ் உற்பத்திக்கு ஏற்ற பிற பைனஸ் இனங்கள் கண்டறியப்பட்டு பயிரிடப்பட வேண்டும்.

7. அத்துடன், தற்போது துறைசார் கண்காணிப்புக் குழுவின் இளைஞர் பிரதிநிதிகள் குழுவினால் மரத்திற்காக பயிரிடப்பட வேண்டிய பைனஸ் இனங்கள் குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிடம் வழங்கியுள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ள *Radiata pine*, *Pinus sylvestris* பைனஸ் வகைகளின் சாத்தியம் பற்றி இனங்கண்டு பயிரிடல் வேண்டும்.

8. CCA (Cromated Copper Asanic) மர சிகிச்சைகளை இந்நாட்டிற்கு கொண்டுவரல் மற்றும் பயன்படுத்தல் Stockholm இணக்கப்பாட்டின் ஊடாக தடைசெய்யப்பட்டுள்ளமையால் தற்போது பயன்படுத்தப்படுவது ACQ சிகிச்சை முறையாகும். இந்த சிகிச்சை முறை அதிக செலவு காரணமாக மாலைதீவு மற்றும் இந்திய CCA மர சிசிக்சை முறைக்கு உட்படுத்திய மரங்கள் கோரப்படுவதுடன், அது நிவுசிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் பாதிப்பில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் 1999 ஆம் ஆண்டு முதல் இந்நாட்டில் CCA மர சிகிச்சை முறை தடைசெய்யப்பட்டுள்ளதால் இதற்காக இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய சந்தை வாய்ப்புகளையும் இழக்க வேண்டி நேரிடுவதால் CCA மர சிகிச்சை இறக்குமதிக்கும் மற்றும் ஏற்றுமதிக்கும் மரத்திற்கு பயன்படுத்துவதற்குள்ள தடையை நீக்குதல் வேண்டும்.

9. ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் மரப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அது "காட்டில் இருந்து வெட்டப்பட்ட மரம்" அல்ல எனும் சர்வதேச FSC/PFSE சான்றிதழ் வழங்கப்பட்டால் ஏற்றுமதி மரப் பொருட்களுக்கு அதிக விலை கிடைக்கும் என்பதால் வணிக வன செய்கை மூலம் பெறப்பட்ட மரப் பொருட்களுக்கான PFSE சான்றிதழ் தயாரிப்புகளுக்கு இலங்கை இதுவரை காலமும் வழங்காத FSC/PFSE சான்றிதழை உற்பத்திக்காக வழங்க பரிந்துரைப்பதாக

10. வணிக மரத்தோட்டத்தின் மூலம் பெறப்பட்ட கிழித்த மரத்தை சிகிச்சை நிலையங்களுக்க கொண்டுசெல்ல அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளம் செயற்பாட்டின் போது உற்பத்தியாளர் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றமையால் வணிக வன செய்கையின் போது பைனஸ் மர போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை தடைசெய்தல் அல்லது இலகுவான ஒன்லைன் முறையொன்றினை அதற்காக தயாரித்தல் பொருத்தமானதென அவதானிக்கின்றேன்.

**இணைப்பு**

**குழுவிற்கு அழைக்கப்பட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் மரச் சங்கங்களின் பிரதிநிதிகள்**

**வன சிவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

திருமதி. ஆர்.எம்.சி.எம். ஹேரத், செயலாளர்
திருமதி வை.டி.எஸ்.எஸ். மல்சிங்க, மேலதிக செயலாளர் (கருத்திட்டம்)
திரு. எச்.டி. ரத்நாயக்க, மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்)

**சுற்றுலா மற்றும் காணி அமைச்சு**

திருமதி. ஆர்.ஏ.என். குமாரி, செயலாளர்
திரு. பிரதீப் எதிரிசிங்க, பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம்). காணி சீர்திருத்த ஆணைக்குழு
செல்வி. ஷியாமலி ரத்நாயக்க, பிரதி பணிப்பாளர் (வருமானம்), காணி சீர்திருத்த ஆணைக்குழு

**வன பாதுகாப்புத் திணைக்களம்**

திரு. கே.எம்.ஏ. பண்டார, பணிப்பாளர் நாயகம், வன பாதுகாப்பு
திரு. ஈ.ஏ.பி.என். எதிரிசிங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம், வன பாதுகாப்பு
திரு. எஸ்.சி. பாலம்கும்புர, வனப் பாதுகாவலர், (பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம்)
திருமதி. கே.ஏ.டி.யு.ஐ. கலன்சூரிய, வனப் பாதுகாவலர், (புதிய அறிவியல் மற்றும் வனவியல் முகாமைத்துவம்)

**அரச மரக் கூட்டுத்தாபனம்**

திரு. எச்.ஜி. பாஸ்வர சேனக, தலைவர்
கலாநிதி நிமல் ருவன்பத்திரன, பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு. ஜி.ஜி.ரீ. கமகே, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
திரு. டபிள்யூ.பி. சமந்தா, பிரதிப் பொதுமுகாமையாளர் (விற்பனை)
திரு. பி.கே. அஜித் சந்தன, உதவி பொதுமுகாமையாளா (வலயம் 1)

**இலங்கைச் சுங்கம்**

திரு. யு.கே.ஏ. ரஞ்சித், மேலதிக சுங்க பணிப்பாயர் நாயகம்
திரு. ஆர்.ஏ.எல்.கே. ரணசிங்க, சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
திரு. ஏ. ஜலீல், சுங்க பிரதிப் பணிப்பாளர்

**சனாதிபதி செயலகம்**

திருமதி. மல்காந்தி ராஜபக்ஷ, சனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளர்
திருமதி. மாலனி குணவர்தன, முகாமைத்துவ சேவைகள் அதிகாரி

**தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி அமைச்சு**

செல்வி. ஆர்.கே.எல். ஜாகொட, பணிப்பாயர்
செல்வி. தனூஜா ரொத்ரிகோ, பிரதிப் பணிப்பாளர்

**மர சங்கங்களின் பிரதிநிதிகள்**

திரு. எஸ்.எச்.பீ. டி சில்வா, லக்கி நவோத்பாதன தனியார் நிறுவனம்
திரு. கே.ஏ.கே.ஜி.பீ. குணவர்தன, லக்ஸ்மன் கியத்மோல் மற்றும் மர களஞ்சிய தனியார் நிறுவனம்
திரு. என்.எம். சிஹான், ராடோ மர காணி தனியார் நிறுவனம்
திரு. எச். ரணில் மாலன், ரணில் கியத்மோல் மற்றும் மர களஞ்சிய நிறுவனம்
திரு. சர்வின் பெரேரா, கே.எஸ்.பீ. ஹோல்டின் நிறுவனம்
திரு. ஏ.ஏ. திரு. திலகரத்ன, திலகா இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம்
திரு. பீ.வை. சதரசிங்க, வூட் லங்கா தனியார் நிறுவனம்
திரு. ஏ.கே.யு.கே. சதரசிங்க, வூட் லங்கா தனியார் நிறுவனம்
திரு. ஜி.ஏ.யு. புஷ்ப குமார, ஹெல்பர்ஸ் ஹோல்டிங் தனியார் நிறுவனம்
திரு. என்.எல்.ஏ. கருணாசிறி, தொடவத்த கியத்மோல் தனியார் நிறுவனம்
திரு. சமன் குணவர்தன, ஜி.டபிள்யூ. ரனோரிஸ் அன் சன்ஸ் மர விற்பனையாளர் தனியார் நிறுவனம்
திரு அதுல கலகொட, ஏ.பீ. மர விற்பனையாளர்கள் தனியார் நிறுவனம்
திரு. ஏ.டீ. ஜெயரத்ன, விங்ஸ் தனியார் நிறுவனம்
திரு. கமல் ரொனால்ட் பிரனாந்து, கோல்டன் டிரெக் சர்வதேச நிறுவனம்
திரு. டபிள்யூ.டி. சந்த ருவன் குமார தயாரத்ன
திரு. ஏ.எம். ரெசில்

**பிற**

திரு. மஹிந்த தேவேந்திர, முன்னாள் பொது முகாமையாளர், அரச மரக் கூட்டுத்தாபனம்